# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 06 - நேரம்:30 நிமிடம்

## வினாப்பத்திரம் : கொம்பில் வைத்த கவளம் போல

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

**வினாத்தொகுதி:01**

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- நீட்டினும்
- தலைநாள்
- ஏமாந்த
- பயின்று

(iii) அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத் திறனும் புகழும் எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

**வினாத்தொகுதி:02**

(i) இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக்குறிப்பிடுக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- கவளம்
- பூண்
- பெறூஉங் காலம்
- பொய்யாகாது

(iii) அதியமான் நெடுமான் அஞ்சி சிறப்புக்களாக இப்பாடலில் குறிப்பிடப்படுவன யாவை?

**(12 புள்ளிகள்)**

வினாத்தொகுதி:03

(i) இப்பாடலில புலவர் வெளிப்படுத்த விளைந்த விடயங்கள் எவை?விளக்குக.

(ii) ஔவையாரின் மனம் வாட்டமடைந்த பின்னணியைக்குறிப்பிடுக.

(iii) அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடை மாண்பினை எடுத்துக்காட்டுக.

**(12 புள்ளிகள்)**

வினாத்தொகுதி:04

(i) ''யானைதன் கோட்டிடை வைத்த கவளம் போலக் கையகத்தது'' எனும் தொடர் ஊடாக வெளிப்படுத்தப்படும் அணியை எடுத்துக்காட்டுக.

(ii) பாடலில் புலவர் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைத்திறனை வெளிப்படுத்த கையாண்ட உத்திகளை எடுத்து விளக்குக.

(iii) இப்பாடல் வெளிப்படுத்தும் சங்ககால புறப்பாட்டு மரபுகளை எடுத்துக்காட்டுக.

**(12 புள்ளிகள்)**